**District Munsif–cum–Judicial Magistrate Court, Kadaladi.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

CC.No.77/2021

Name : திரு.விஜயகபிலா
Rank of the witness : PW 4
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Accused present.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 05.12.2023.

முதல் விசாரணை:–

1. நான் கடலாடி சமத்துவபுரத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். கடலாடி அரசு கலைக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சைன்ஸ் படித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. ஆஜர் எதிரி எனது அப்பா.

2. எனது அப்பா கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே எங்களை விட்டு பிரிந்து சென்று விட்டார். தற்போது அவர் எங்கே வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நானும், எனது தம்பியும் அம்மாவுடன் சமத்துவபுரத்தில் வசித்து வந்தோம்.

3. சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நானும் எனது அம்மாவும் வீட்டில் இருந்தோம். நாங்கள் வளர்த்து வந்த ஆட்டை விற்றுவிட்டோம். அது குறித்து எனது அப்பா வந்து சண்டை போட்டார். எனது அம்மாவை அடித்து அருவாளால் வெட்டிவிட்டார். பின் தலையில் வெட்டினார்.

4. ரத்தக்காயம் ஏற்பட்டது. நானும் எனது அத்தை உமாபாண்டி என்பவரும் எனது அப்பாவை தடுத்தோம். காயம்பட்ட எனது அம்மாவை கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது கடலாடி போலீசார் வந்து விசாரித்தார்கள்.

5. பின்னர் மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு ஸ்கேன் எடுத்து சிகிச்சை செய்தார்கள். என்னை போலீசார் சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.